**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC.212/2020 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.5 |
| Name : | பிரியா |
| Father's Name/Husband Name: | ராஜேந்திரன் |
| Village : | நக்கசேலம் |
| Taluk : | ஆலத்தூர் |
| Age : | 19/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 15.07.2026

**(1969-ம் ஆண்டின் 54வது விதியில் 9-வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**(எதிரிகள் 1, 2, 4, 5 ஆஜர். 3ம் எதிரி ஆஜர் இல்லை. அவருக்காக கு.வி.மு.ச.317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

**முதல் விசாரணை**

நான் தற்போது நக்கசேலம் கிராமத்தில் வசித்து தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். சுமார் 6 வருடங்களுக்கு முன்பு இரவு 8 மணியளவில் நான் கடைக்கு சென்றுவிட்டு திரும்பி வரும்போது எதிரிகள் என்னிடம் பிரச்சனை செய்ய வந்தபோது எதிரிகளும் என்னடைய உறவினர்களும் சத்தம் போட்டு பேசிக் கொண்டார்கள். அதில் கூட்டம் கூடிவிட்டது. கூட்டத்தில் இருந்த யாரோ சிலர் என்னுடைய அண்ணன் அ.சா.1 கீழே தள்ளிவிட்டு அடித்துவிட்டார்கள். கூட்டத்தில் எதிரிகள் இருந்ததால் சந்தேகத்தின் பேரில் அ.சா.1 புகார் கொடுத்துவிட்டார். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது**

**அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை**

என்னுடைய அப்பா ராஜேந்திரன் என்பவருக்கு உடல்நிலை சரியில்லாததால் அவருடன் நான் இருந்து பார்த்துக் கொண்டேன். எனது அப்பாவை பார்க்க பட்டியல் சாட்சிகள் 1 முதல் 4 வரை உள்ளவர்கள் அனைவரும் என்னுடைய வீட்டிற்கு வந்திருந்தார்கள் என்றால் சரிதான். 16.02.2020ம் தேதிஎன்னை இரவு 8 மணியளவில் நான் கடைக்கு சென்றுவிட்டு திரும்பி வரும்போது 1ம் எதிரி என்னை கெட்ட வார்த்தையால் திட்டி அடித்ததாகவும் அதைக் கேட்ட அ.சா.2யை 1ம் எதிரி சேலையை பிடித்து அடித்ததாகவும், தடுக்கச் சென்ற அ.சா.1 மற்றும் அ.சா.2 அவர்களுடன் வந்த இரும்புதுரை, காளிமுத்து ஆகியோர்களை 1 முதல் 5 வரையிலான எதிரிகள் கெட்ட வார்த்தையால் திட்டினார்கள் என்றால் சரியல்ல.

1ம் எதிரி அ.சா.1யை காலால் உதைத்ததாகவும், அ.சா.4யை 1ம் எதிரி காலால் இடது பக்க காது பக்க தோள்பட்டை இடது முழங்கால் ஆகிய இடங்களில் குத்தியதாகவும், சாட்சி இரும்புதுரையை 3ம் எதிரி வலது விலா, வலது நடுவிரலில் கல்லால் குத்தியதாகவும், எதிரி உதயக்குமார் என்னை காலால் இடது பக்க தேள்பட்டை முழங்காலில் அடித்ததாகவும், சாட்சி கலியமுத்துவை 4 மற்றும் 5ம் எதிரி முடியை பிடித்து இழுத்து கண்ணத்தில் அடித்தும் அவர் வைத்திருந்த ஆயுதங்களை காட்டி கொலை மிரட்டல் விடுத்ததாகவும், போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நானும் எதிரிகளும் தற்போது சமாதானமாக சென்றுவிட்டோம் என்றால் சரிதான். அதனால் எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.